


**ISSN Print:** 2394-7500
**ISSN Online:** 2394-5869
**Impact Factor:** 5.2
IJAR 2016; 2(9): 561-565
www.allresearchjournal.com
Received: 19-07-2016
Accepted: 20-08-2016

**முனைவர் சு.சரஸ்வதி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் புலம், எஸ். ஆர். எம். பல்கலைக்கழகம்,
காட்டாங்குளத்தூர்.

**முனைவர் தா.ஜெயந்தி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் புலம், எஸ். ஆர். எம். பல்கலைக்கழகம்,
காட்டாங்குளத்தூர்.

**Correspondence**
**முனைவர் சு.சரஸ்வதி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் புலம், எஸ். ஆர். எம். பல்கலைக்கழகம்,
காட்டாங்குளத்தூர்.

# ஐங்குறுநூறு மருதத்திணைப் பாடல்களில் உள்ளுறை உணர்த்தும் பொருண்மைகள்

***முனைவர் சு.சரஸ்வதி. முனைவர் தா.ஜெயந்தி***

## Abstract
இலக்கியம் வாழ்க்கைக்கு வழிகாட்டி.அது பழைய வாழ்வு முறையைச் சித்தரித்துக்காட்டி அதன் வழிப் புதிய வாழ்வு முறைக்கு வழிகாட்டும் துணையாகத் திகழ்கிறது.ஒரு நாட்டின் பண்பாட்டை விளக்கிக்காட்டுவது இலக்கியமே ஆகும். இலக்கியச் சொல்லோவியத்தில் அறநெறிகளை அமைத்துக்காட்டுவது, அவைகளின் மூலம் மக்களுக்கு அறிவுறுத்துவது, மக்களை நல்வழியிலே நடக்கும்படித் தூண்டுவது இதுவே இலக்கியமாகுமென்பார் சாமி சிதம்பரனார். சங்க இலக்கியங்கள் வாழ்விற்கான நெறிமுறைகளை எடுத்துக்கூறும் கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.மேலும் நெறியற்ற முறையில் வாழ்பவர்களை மென்மையான முறையில் இடித்துக்கூறி வழிநடத்தும் நீதி இலக்கியமாகவும் திகழ்கின்றன.
ஐங்குறுநூறு என்னும் நூல் பாட்டும் தொகையுமாகிய சங்கப் பாடல்களில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்று.மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் வரிசையில் ஐந்திணைப் பாடல்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.ஒவ்வொரு திணையிலும் 100 பாடல்கள் உள்ளன.அவை சிறுசிறு ஆசிரியப் பாக்களின் அடுக்குகளாக உள்ளன.ஒவ்வொரு திணையிலும் 10 பாக்களைக் கொண்ட 10 அடுக்குகள் உள்ளன.ஒவ்வொரு திணையிலுமுள்ள 100 பாடல்களையும் ஒரே புலவர் பாடியுள்ளார்.இந்த நூலின் மருதத்திணைப் பாடல்களைப் பாடியவர் ஓரம்போகியார்.

## Introduction
”வேந்தன் மேய தீம்புனல் உலகமும்” (1) என்னும் மருதம், பல்பொருள் வளமையால் பெருக்கமுற்றிருந்தது போன்றே மக்களின் வாழ்வியல் வகையாலும், பிற நிலத்து மாந்தரினும் தனித்தன்மை பெற்றிருந்தது. மழை நோக்கி வாழ்வாராதலால் சிலகாலத்துக் கடின உழைப்பும், விளைவு பெற்ற பின்னர் சிலகாலத்தே நெடிய ஓய்வும் பெற்ற வாழ்வினராக மருத மக்கள் விளங்கினர். தலைவியைப் பிரிந்த காலத்தில் நின்னால் நேர்ந்த துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு மழை பொய்க்காது பொழிந்து அதனால் நாட்டின் வளம் மிகப் பெருகவும், குடிமக்கள் வருந்தாது அவர்களைத் தாங்கும் நல்லாட்சி நடைபெறவேண்டும் என்று வேண்டி நின்றாள் என்று கூறினாள் தோழி.

> “இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்டில்
> பெயலும் விளையுளுந் தொக்கு” (2)

என்று தொன்றுதொட்டு வந்த தமிழர் நன்னம்பிக்கையின் திறந்தோய்ந்த இத்தலைவியும் அவ்வாறு வேண்டி நின்றாளாம். அன்றும் இன்றும் தமிழ்ப்பெண்டிர் களவிலும், கற்பிலும் ஒழுக்கநெறியைப் பின்பற்றுங்கால், அவனுக்கு ஒன்றும் நேராவாறு நின்றொழுக வேண்டுமென்றும், நாடு வளங் குன்றாது திகழவேண்டுமெனபரவி நிற்றல் வழக்காகலான் அந்நெடிய மரபிற் போந்த இத்தலைமகளும் இங்ஙனம் ஆற்றியிருந்தாளாம்.

உள்ளுறை உவமம் :

உள்ளுறை உவமம் என்பது தமிழ் இலக்கியத்திற்கே உரிய தனிநெறி. காதல் மாந்தர்கள் தம் குறிப்பினை அமைப்பதற்கு நம் முன்னோர் கண்டெடுத்த இனிய, நேரிய நாகரிக வழியே உள்ளுறை உவமம் .இவ்வாறு கவிஞன் தான் கருதிய பொருளை செய்யுளில் வெளிப்படையாக கூறாமல் நுணுக்கமாக குறிப்புப் பொருளாக உள்ளே உறையும்படி வைத்து

உவமையாக்கி கூறுதல் உள்ளுறை உவமம் எனப்படும்.
“உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்” (3)

இவ்வுவமம் மிகவும் வலிவான கட்டுப்பாடுகளை உடையது.அகப்பொருளாம் ஐந்திணையில் மட்டுமே பயன்படுத்துவதற்கு உரியது.கருப்பொருள் என்னும் இயற்கைச் சூழலிலிருந்து புனையப்படுவது. வெளிப்பார்வைக்குச் செடி, கொடி, மரம், பறவை, விலங்குகளின் செயல்களைப் புனைவதுபோல் காணப்படும்.இவற்றை நேரடியாக எடுத்துக் கூறுவது அகப் புலவர்களின் நோக்கமன்று. உட்கருத்தை உள்ளே வைத்துப் புறத்தில் வேறு கருத்துக் கூறுவர். அகமாந்தர்கள் கேட்போர் உணர்ந்து கொள்ளும் வண்ணம் இவ்வுள்ளுறை வாயிலாகக் குறிப்பிட்ட மனவோட்டங்களை முன்னிறுத்துகின்றனர். இங்கு இடம்பெறும் காட்சிகள், அதாவது முதல், கருப்பொருள்கள் வெறும் இயற்கைப் புனைந்துரைகளாக இலக்கியத்தில் இடம்பெறாமல், அக மாந்தரின் மன உணர்வுகளை விளக்கிக் காட்டும் பின்புலங்களாகவே பாடல்களில் இடம்பெறுகின்றன.

இலக்கியத் துறையில் குறிப்புப்பொருள் கண்டுகணிக்கும் முறையை வகுத்த முதற்பெருமை தொல்காப்பியர்க்கே உரியது எனலாம். தொல்காப்பியர் உள்ளுறையை அகத்திணையியலிலும் (நூற்பா, 49-52) உவமவியலிலும் (24-33), பொருளியலிலும் (46-48) கூறியுள்ளார்.

அகத்திணை ஒழுக்கத்தில் களவியலை அடுத்துத் தொடரும் பகுதி கற்பியலாகும்.கற்பியல் வாழ்வு என்பது பலபேர் அறியத் திருமணம் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்துலாகிய இல்ல நெறியாகும். கற்பியல் வாழ்வின் கூற்று நிகழ்த்துபவராகத் தலைவன், தலைவி, தோழி, பரத்தை, வாயிலோர் ஆகியோர் திகழ்கின்றனர்.

மருதத்திணையில் இடம்பெற்றுள்ள தலைவன், தலைவி, தோழி, பரத்தை, வாயிலோர் ஆகியோர்களின் கூற்றுக்களின் மூலம் வாழ்வியல் பொருண்மைகளை உள்ளுறைகளின் மூலம் உணர்த்துகிறார். உள்ளுறைகள் அனைத்துமே உளவியல் சார்ந்தன.அதிலும் மருதத்திணைக்குறிய உள்ளுறைகள் மிகச்சிறப்பானவை. விலங்குக்காட்சிகள் ஒருபுறம் தலைவன் நிலையை உள்ளுறையாகச் சுட்டுவதும், மறுபுறம் தலைவி நிலைப்பற்றி உய்த்துணரும்படி சில வரிகள் அமைந்திருப்பதும் இங்கு நீதி நெறி புகட்டும் சிறப்பாக அமைகின்றன. தலைவனின் பரத்தை நாடலைப் புலவர் நீதியற்ற செயல் என உணர்த்துகிறார்.தோழி கூற்று உணர்த்தும் உள்ளுறைப் பொருள் பரத்தை நாடல் தீது என்பதாகும். மருத நிலக்கருப்பொருள்களின் மூலம் முறையற்ற செயல்களைக்கூறி அவற்றின் மூலம் நல்லதைக் காட்டி அதனை மனதில் பதிய வைத்தல், தீமையைக் காட்டி அதனால் திருந்தி நடக்கும் நிலையைத் தாமாகவே மனதில் பெறவைத்தல் ஆகிய முறைகளில் நீதி உணர்த்தப்படுகிறது.

மருதத்திணையில் இடம்பெற்றுள்ள உள்ளுறைகளின் எண்ணிக்கை – 56

| வ.எண் | தலைப்பு | தலைவன் | தலைவி | தோழி | பரத்தை | வாயில்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வேட்கைப் பத்து | - | - | 10 | - | - | 10 |
| 2. | வேழப் பத்து | - | 9 | 1 | - | - | 10 |
| 3. | களவன் பத்து | - | 2 | 8 | - | - | 10 |
| 4. | தோழிக்கு உரைத்த பத்து | - | - | - | 1 | - | 1 |
| 5. | புலவிப் பத்து | - | 4 | - | - | - | 4 |
| 6. | தோழி கூற்றுப் பத்து | - | 1 | 2 | - | - | 3 |
| 7. | கிழத்தி கூற்றுப் பத்து | - | 6 | - | - | - | 6 |
| 8. | புனலாட்டுப் பத்து | - | - | - | 1 | - | 1 |
| 9. | புலவி விராய பத்து | - | - | - | 4 | - | 4 |
| 10. | எருமைப் பத்து | 3 | 1 | 2 | - | 1 | 7 |
| | | 3 | 23 | 23 | 6 | 1 | 56 |

**தலைவன் கூற்றுப் பாடல்களின் வழி புலப்படும் உள்ளுறை உண்மைகள்:**

''கரணத்தின் அமைந்த முடிந்த காலை……
தான் அவள் பிழைத்த நிலையில் கண்ணும்'' (4)
(தலைவிக்கு தான் செய்த பிழையைக் கருதுதல்)

எனத்தொடங்கும் கற்பியல் நூற்பா தலைவன் கூற்று நிகழும் இடங்களைத் தொகுத்துக் கூறுகின்றது.''தலைவனின் நாடு, ஊர், இல், குடி, பிறப்பு, சிறப்பு ஆகியன கூறித்தோழி வரைவு கடாவுகின்றாள் என்பார் இராமகிருட்டிணன்'' (5)

''கருங்கோட் டெருமைச் செங்கண் புனிற்றாக்
காதற் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்
நுந்தை நும்மூர் வருவதும்
ஒண்தொடி மடந்தை! நின்னையாம் பெறினே'' (6)

தலைவியின் மனக்குறிப்பை அறிந்த தலைமகன், 'வரைவதற்குரிய நிலைமை சிறப்பின் யானே வரைவோடு வருவேன்' எனத் தன் உள்ளவுறுதியைக் கூறுகிறான்.''உலக அனுபவம் பெற்ற தலைவன் பொருள் கருதி அதனை உயிர் என எண்ணி பொருளீட்டக் கருதியது நீதியின் பாற்பட்டதாக உள்ளது. இவ்வாறு உலகை உய்விக்கப் பொருளீட்ட முயலும் தலைவன் அவனது அக வாழ்வில் மாறுபட்டவனாகப் பரத்தை நாட்டமுடையவனாகக் காட்டப்பட்டிருக்கின்றான்.'' (7)

''அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்
முள்ளி வேரளைச் செல்லும் ஊரன்
நல்ல சொல்லி மணந்து, இனி
'நீயேன்' என்றது எவன்கொல்? அன்னாய்! '' (8)

''சேராடிய களவன் முள்ளி வேரளைச் செல்லும் '' என்றது பிறர் கூறிய அலர் கேட்டும் அஞ்சாது தலைவன், பரத்தையர் வீட்டிக்குத் தொடர்ந்து செல்கிறான். சேற்றுடன் நண்டு அளையில் நுழைவது போல பரத்தை உறவு என்ற கறையுடன் தன் வீட்டிற்குள் நுழைகிறான் தலைவன். தலைவன் பரத்தையரிடம் உறவு கொண்டு களங்கப்பட்டாலும் இறுதியில் வாயிலோர் மூலம் தூது அனுப்பி தன் வீட்டிற்கு வந்து தலைவியிடம் மன்னிப்பு கேட்டு சேர்ந்து வாழ்வதே விதியாகும்.

பரத்தை நாட்டம் உடைய தலைவன் புறத்தொழுக்கம் அறமற்ற செயல் எனத் தோழியும், தலைவியும் இடித்துரைக்கின்றனர். சில இடங்களில் நேராக நடக்கின்றது.பெரும்பான்மை உள்ளுறைகள் மூலம் கூறப்படுகின்றன.

கருங்கோட் டெருமை கயிறுபரிந் தசைஇ,
நெடுங்கதிர் நெல்லின் நாள்மேயல் ஆரும்
புனன்முற் றூரன் பகலும்
படர்மலி யருநோய் செய்தனன் எமக்கே. (9)

எருமை தன்னைக் கட்டிய கயிற்றை அறுத்துப்போய், நெற்பயிரைச் சென்று மேயும் ஊரன் என்றது, அவ்வாறே தலைவனும் தை குடிப்பெருமையும், காதல் மனைவிக்குச் செய்யும் கடமையுமாகிய கட்டுப்பாடுகளை விட்டு நீங்கிச் சென்று, பரத்தையோடு உறவாடிக்களிப்பதைக் கூறுகிறது.

தலைவன் தலைவியைக் காத்தல் வேண்டும்.அதுவே உலக நீதி.இதைக்கூற விரும்பிய புலவர் இதமான மொழியில் கூறுகின்றனர். தலைவியின் மனநிலையைக்கூறி, அவளுக்காகவேனும் தலைவன் தன் செயல் இழிந்தது என்று எண்ணாவிடினும் தலைவியின் தவிப்பை, அவளது மனத்துடிப்பை மாற்றி ஆறுதல் பெற மகிழ்வுறுத்தவேனும் அவன் பரத்தை நாடலை நீக்க வேண்டும் என்னும் நீதிநெறி இங்கு உணர்த்தப்பெறுகிறது. இங்கு நீதி அடித்துச்சொல்லாமல் கெஞ்சும் முறையில் உள்ளுறையாகச் சுட்டப்பட்டுள்ளது.

தலைவிக்கூற்றுப் பாடல்களின் வழி புலப்படும் உள்ளுறை உண்மைகள்:

தற்காத்துத் தன்னைக் கொண்டானையும் பேணி இல்லறம் நடத்துபவள் தலைவி. கொழுநனின் குடிப்பெருமையையும், தன்குடிப்பெருமையையும் காத்துச் சிறந்த இன்பங்களைத் துய்த்து மக்கட்பேறு பெற்று வாழும் வாழ்க்கையைச் பெரிதெனப் போற்றும் பண்புடையவள் கட்டுபாடுடையவள், தலைவி. தலைவிக்கூற்றுப் பாடல்களில் மொத்தம் 23 உள்ளுறைகள் உள்ளன.

”தன் பார்ப்புத் தின்னும் அன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத்து” (10)

தானே விரும்பி மணந்துகொண்ட தன் அன்பு மனையாளையும் வருந்தி நலிவித்து நலன் அழியச் செய்யும் கொடியவன் என்பதை***முதலை தன் குட்டியைத் தின்னும் பொய்கை ஊரன் தலைவன் என்று உள்ளுறையாக சுட்டப்பட்டுள்ளது. அதாவது தலைவியைத் தின்றுவிட்டு வேறொருத்தியிடம் வாழும் தலைவன் ஒழுக்கமின்மை கூறப்பட்டுள்ளது. மேலும்,***

“நறுவடி மாஅத்து விளைந்துதுடு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்” (11)

மாவின் முதிர்ந்த கனி தானாகவே குளத்து நீரில் துடுமென விழூஉம் என்னும் அதுபோல பரத்தையர் சேரியிலே பக்குவமான இளங்கன்னியர் தலைவனின் வலையிலே தாமாகவே வந்து ஆரவாரத்துடன் விழுகின்றனர் என்று தலைவனின் புறஒழுக்கத்தையும்,

***“கரும்புநடு பாத்தியிற் கலித்த ஆம்பல்
சுரும்பசி களையும் பெரும்புனல் ஊர***
புதல்வனை ஈன்றவெம் மேனி

முயங்கன்மோ தெய்ய; நின் மார்பு சிதைப்பதுவே” (12)

***கரும்பு நட்ட வயலுக்குப் பாய்ச்சும் நீரால் ஆம்பல் கொடி தன் பசியைப் போக்கிக்கொள்ளும். (அதுபோல அவள் தன் உடல்பசியைப் போக்கிக்கொள்கிறாள்.) உன் மார்பை அவள் சிதைக்கிறாள். நீ மயங்காதே*** என்றும் குழந்தை பெற்றுக்கொள்ளும் அந்த உரிமை இல்லாதவள் பரத்தை என்று தன் சிறப்புரிமைப் பற்றிக் கூறுகிறாள் தலைவி. பரத்தை தன்னைப் பற்றி இழிவாக ஏதோ கூறினாள் எனக் கேட்ட தலைவி, அப்போது அப்பரத்தையரின் தோழியற்கேற்ப தலைவனுக்குச் சொல்வது போல இடித்துக் கூறுகிறாள்.

விரிமலர்த் தாதுண் வண்டினும் பலரே
ஓதி ஒண்ணுதல் பசப்பித்தோரே” (13)

என்பதற்கு அவளைத் தழுவி இன்புற்று பிரிந்து சென்ற ஆடவரும் பலராவர் என்று பொருள் காணலும் பொருந்தும். இதன் மூலம் தன் கற்புச் சால்வு பற்றியும் பரத்தையின் இழிவு பற்றியும்தலைவனிடம் கூறியதாக அமைந்துள்ளது.

“கருங்கோட் டெருமை கயிறுபரிந் தசைஇ
நெடுங்கதிர் நெல்லின் நாள்மேயல்” (14)

***கயிற்றை அறுத்துக்கொண்டு நெற்பயிரை மேயும் எருமைக்கடா போன்று தலைவனும் தன் குடிப்பெருமையும், தன் அன்பு மனைவிக்குச் செய்யும் கடமைகளிலிருந்து தவறி கட்டுப்பாடுகளை விட்டு பரத்தையோடு உறவாடி களிக்கின்றான் என்று தலைவனின் செயல்களை இடித்துக்கூறுகிறாள் தலைவி.*** பரத்தை தொடர்புக்கு மூல காரணமாக உள்ள தலைவனை தனது மொழிகள் வழி திருத்த முயலுகின்றாள்.ஒரு தீய செயலுக்கு எது மூலகாரணமோ அதை கண்டு வழிபடுத்தும் முறையையில் தலைவி செயல்படுகின்றாள்.இங்கு தவறுவது மனித இயல்பு, மன்னிப்பது மனித பண்பு என்ற கொள்கை தலைவன் - பரத்தைத் தொடர்பில் தலைவிக்குரிய நீதியாகின்றது.வறுமைக்கு ஈதல் வேண்டும், குற்றம் செய்பவரை மன்னித்து திருத்த வேண்டும் என்பன தலைவி உணர்த்தும் நீதிகளாகின்றன.

தோழிக்கூற்றுப் பாடல்களின் வழி புலப்படும் உள்ளுறை உண்மைகள்:

தலைவன், தலைவி இவர்களது வாழ்வில் முக்கியமான இடத்தைப் பெறுபவளாக தோழி விளங்குகிறாள். தலைவன் பிரிவில் வாடும் தலைவியை ஆற்றுப்படுத்துவதும், தலைவன் புறத்தொழுக்கம் கொண்டபோது அவனை திருத்துவதும் , தலைவனுக்கும் தலைவிக்குமிடையே பாலமாகச் செயற்பட்டு அவர்தம் இன்ப வாழ்விற்கு வழிவகுப்பவளாக தோழி விளங்குகிறாள்.

“நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு”(15)

என்ற வள்ளுவர் கருத்துக்குப் பாத்திரமாக விளங்குகிறாள் தோழி. இவள் கூற்று ஏனைய கூற்றுக்களிலும் பெரும்பான்மை இடத்தைப் பெறுவதன் மூலம் இவள் திறமை நன்கு புலப்படுமென்பார் வ.சுப. மாணிக்கனார்.(16) தோழிக் கூறும் சொற்கள் அனைத்தும் தலைவியின் பண்புகளையும், சிறப்பகளையும் உணர்த்துவனாகத் திகழ்கின்றன. இச்சிறப்புப்பெற்ற தோழியின் கூற்றுகளில் தலைவி,தலைவன், பரத்தை ஆகியோருக்கான நீதிகள் கூறப்படுகின்றன. கற்போருக்கு வாழ்க்கை முறைகளை உணர்த்தவும், உலகியலை எடுத்து இயம்பவும் தோழி என்னும் பாத்திரம் பயன்படுகிறது.மருதத்திணையில் தோழிக்கூற்றுப் பாடல்களில் மொத்தம் 23 உள்ளுறைகள் உள்ளன.தோழி கூற்று உணர்த்தும் உள்ளுறைப் பொருள் பரத்தை நாடல் தீது என்பதாகும்.இங்கு குறியீடாகப் பயன்படுபவன காரான், எருமை, களவன், மீன், இறால், ஆமை, நீர்நாய், நாரை, முதலை, ஆம்பல் மலர் போன்ற மருதக்கருப்பொருட்களும் அவற்றின் முறையற்ற செயல்களுமாகும்.நீதி கற்பித்தல் இங்கு இரு முறைகளில் நடைபெறுகின்றது.

1. நல்லதையே காட்டி அதனை மனதில் பதியவைத்தல்
2. தீமையைக் காட்டி அதனால் திருந்தி நடக்கும் நினையைத் தாமாகவே மனதிற் பெற வைத்தல்.
3.

“நனைய காஞ்சிச் சினைய சிறுமீன் யாணர் ஊரன்”(17)

என்றது உயர்ந்த ஒன்றையும் இழிந்த ஒன்றையும் ஒருசேர இணைத்துக் கூறுதலேபோலத் தலைவியையும் பரத்தையையும் ஒன்று போல நினைத்து ஒழுக்கம் தவறிய தலைவனின் செயல்களை இடித்துக்கூறுகிறாள் தோழி. மேலும்,

”தாய்சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவனூர்” (18)

***தாய் சாவப் பிறக்கும் களவனையும், தன் குட்டிகளை தின்னும் முதலையையும் உடைய கொடுமையான ஊரினையுடைய தலைவன் பரத்தையருள்ளும் ஒருத்தியை விட்டு ஒருத்தியை பற்றி ஒழுகும் தலைவனின் செயலைக் கண்டிக்கிறாள்.***

”புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்” (19)

என்பது ***களவன் ஆம்பல் கொடியை நறுக்கும். அதன் வேரில் பதுங்கும். வயலைக் கொடி, வள்ளைக்கொடி, செந்நெல் கதிர், செந்நெல் முளை ஆகியவற்றைக் களவன் அறுக்கும். தன் வளைக்குள் நெல்லைச் சேமிக்கும். அந்த வளையில் ஓடி ஒளிந்தகொள்ளும். - என நண்டின் இயல்புகள் இங்குக் கூறப்படுகின்றன. திருட்டுத்தனம் செய்யும் நண்டு போல் பரத்தையோடு திருட்டுத்தனம் செய்யும் தலைவனின் செயல்கள் சுட்டப்பட்டுள்ளன.***

மேற்கண்ட உட்பொருள்களில் உள்ளுறையாக கூறி தலைவன் பரத்தையை நாடல், அவளுடன் தொடர்பு கொள்ளல், அதற்குப் பாணன் துணை செய்வது, தலைவனின் இச்செயல் குறித்து ஊரில் அலர் எழுவது, அந்த அலருக்கு அஞ்சித் தலைவன் இல்லத்திற்கு வரல், வரும்போது பரத்தைச்சேரியில் சுற்றி அலைந்து, அந்தச் செவ்வி மாறுபடாதிருத்தல் போன்றவையாகும்.

மருதநிலக் காட்சிகள் அனைத்தும் அகத்திணைக்குரிய உரிப்பொருளை உள்ளடக்கியே காட்சிகள் அமைந்துள்ளன.அக்குறியீடுகள் உணர்த்தும் பொருள் நன்மையை நோக்கியதாக அமைகின்றது.ஒருத்திக்கு ஒருவன் என்ற நீதி வலியுறுத்தப்படுகின்றது. அதனின்றும் மாறுபட்டால் ஏற்படும் விளைவுகளைக் கருப்பொருள்கள் மூலம் உள்ளுறைகளாகப் பயன்படுத்தப்பட்டு உள்ளன.

**பரத்தையர் கூற்றுப் பாடல்களின் வழி புலப்படும் உள்ளுறை உண்மைகள்:**

அக இலக்கியங்களில் பிறருக்காக வாழும் பேராண்மை படைத்தவனாக தலைவன் காட்டப்பட்டுள்ளான்.அதே தலைவன் பரத்தை நாடுபவனாகவும் இருக்கின்றான்.மருதப் பாடல்கள் தலைவனின் இச்செயலைச் சுட்டுகின்றன.குடும்பம் பிளவுபடாமல் இருக்கப் பொறுமையுடன் வாழும் மனப்பான்மை தலைவிக்கு வேண்டுமென்பதைச் சுட்ட ஓர் சான்றே தலைவனின் பரத்தைநாடல்.வாயில் நேர்தலும் மறுத்தலும் விட்டுப்பிடிக்கும் பண்பைக் கற்றுக்கொள்ள, கடைப்பிடிக்க உருவானதாக வ.சுப.மாணிக்கம் கூறுகின்றார்.

வசதிகள் வாழ்வைப் பண்படுத்த வேண்டும், நெறிப்படுத்தவேண்டுமே தவிர நெறியற்ற வாழ்வுக்கு வழிவகுக்கக் கூடாது.நெறியற்றவர் இருப்பதால்தான் வாழ்வின் நெறிமுறைகள் மாற்றம் பெறுகின்றன.அதனால் நெறியற்றவர் உருவாக்கப்படுகின்றனர்.அது தவறு என்னும் நீதியை மருதத் திணையின் பரத்தையர் பிரிவுப் பாடல்களின் உள்ளுறைகள் உணர்த்துகின்றன.மருதத்திணையில் 6 பாடல்களின் உள்ளுறைகள் அமைந்துள்ளன.

ஊடுதலும், ஒதுக்குதலும் பரத்தையர்க்கும் உண்டு.தன்னைப்பற்றித் தலைவி கொடுமை கூறினாள் என்று கேட்ட பரத்தைக்குத் தலைவியின் மீது கோபம் உண்டாகின்றது. தலைவியைப்போல தனக்குப் தலைவன் மீது உரிமைப்பிடிப்பு இல்லையென்று தெரிந்திருந்தும், தவறான முறையில் காதல் வயப்பட்டும் அவனை மறக்கமுடியாமல் உள்ளம் பதறித் துடிக்கின்றாள்.

''கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும் ஊர'' (20)

பலவான ஆநிரைகளை உடைய கோவலர்கள் கையில் வைத்திருக்கக்கூடிய கரும்பைச் சுவைத்து இன்புறுவது. தலைவனின் தன் உணர்வே பரத்தை நாடலுக்கு முதன்மைக் காரணமேயன்றிப் பரத்தை காரணமன்று.எந்த ஒரு பாடலிலும் முதலில் பரத்தை நேராக வந்து அவனைத் தன் வயப்படுத்தியதாகச் செய்திகள் இல்லை.துவக்கம் என்பது தலைவனிடம் தான் உள்ளதாகச் செய்திகள் உள்ளன.

**முடிவுரை:**

ஐங்குறுநூறு குறைந்த அளவினதான அடிகள் கொண்டிருந்தாலும் இப்பாடல்களில் அகப்பொருளுக்குரிய முதல், கரு, உரி ஆகிய மூன்றும் குறைவின்றி அமைந்துள்ளன.உள்ளுறை, உவமை முதலிய நயங்கள் நிறைந்துள்ளன.மேற்கண்ட உட்பொருள்களில் உள்ளுறையாக கூறி தலைவன் பரத்தையை நாடல், அவளுடன் தொடர்பு கொள்ளல், அதற்குப் பாணன் துணை செய்வது, தலைவனின் இச்செயல் குறித்து ஊரில் அலர் எழுவது, அந்த அலருக்கு அஞ்சித் தலைவன் இல்லத்திற்கு வரல், வரும்போது பரத்தைச்சேரியில் சுற்றி அலைந்து, அந்தச் செவ்வி மாறுபடாதிருத்தல் போன்றவையாகும். மருதநிலக் காட்சிகள் அனைத்தும் அகத்திணைக்குரிய உரிப்பொருளை உள்ளடக்கியே காட்சிகள் அமைந்துள்ளன.அக்குறியீடுகள் உணர்த்தும் பொருள் நன்மையை நோக்கியதாக அமைகின்றது.ஒருத்திக்கு ஒருவன் என்ற நீதி வலியுறுத்தப்படுகின்றது. அதனின்றும் மாறுபட்டால் ஏற்படும் விளைவுகளைக் கருப்பொருள்கள் மூலம் பாடல்களில் உள்ளுறைகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன.

**தொகுப்பு:**

1. தலைவிக்கு உயிர் போன்றவன் தலைவன். தலைவியின் தவிப்பை, அவளது மனத்துடிப்பை மாற்றி ஆறுதல் பெற மகிழ்வுறுத்தவேனும் அவன் பரத்தை நாடலை நீக்க வேண்டும் என்னும் நீதிநெறி இங்கு உணர்த்தப்பெறுகிறது.

2. தவறுவது மனித இயல்பு, மன்னிப்பது மனித பண்பு என்ற கொள்கை தலைவன் – பரத்தைத் தொடர்பில் தலைவிக்குரிய நீதியாகின்றது. வறுமைக்கு ஈதல் வேண்டும், குற்றம் செய்பவரை மன்னித்து திருத்த வேண்டும் என்பன தலைவி உணர்த்தும் நீதிகளாகின்றன.

3. ஒருத்திக்கு ஒருவன் என்ற நீதி வலியுறுத்தப்படுகின்றது. அதனின்றும் மாறுபட்டால் ஏற்படும் விளைவுகளைக் கருப்பொருள்கள் மூலம் உள்ளுறைகளாகப் பயன்படுத்தப்பட்டு உள்ளன.

**அடிக்குறிப்புகள்:**

1. தொல்.பொரு.நூற்பா.951
2. திருக்குறள் எ.545
3. தொல்.பொருள்.நூற்பா.994
4. தொல். பொருள்.1092
5. அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு பக்.45-46
6. ஐங்குறுநூறு: மருதம். பா.எ.92
7. அகநானூற்றில் வாழ்வியல் நீதி நெறிகள் ப.27
8. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.22
9. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.95
10. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.41
11. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.61
12. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.65
13. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.67
14. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.95
15. திருக்குறள் எ .784
16. தமிழ்க்காதல் ப.58
17. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.1
18. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.24
19. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.21
20. ஐங்குறுநூறு: மருதம், பா.எ.87

**ஆய்வுக்குப் பயன்படுத்திய நூல்கள்:**


1. அழகம்மை, K.P., -''அகநானூற்றில் வாழ்வியல் நீதி நெறிகள்''- அண்ணாமலையார் பதிப்பகம், பி.71, அரவிந்த் இல்லம், தமிழ் நாட்டு வீட்டு வசதி வாரியம், கழனி வாசல், காரைக்குடி.

2. குமரன்,இரா., முனைவர் - “சங்க இலக்கிய அகப்பாடல்களில் கருத்துப் புலப்பாட்டு உத்திகள்” அனன்யா,8/37,பி.ஏ.ஓய்.நகர், குழந்தை இயேசு கோவில் அருகில், புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர் – 613 005.
3. சுப்பு ரெட்டியார்,ந., (பேரா.,) - ”திருக்குறள் தெளிவு” சுரா புக்ஸ் (பிரைவேட்) லிமிடெட், 1620, ‘ஜே’ பிளாக், 16 –வது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040.
4. தமிழண்ணல்., (உ.ஆ.) - தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை – 625 001. ஏப்ரல் – 2008.
5. பாக்கியமேரி., முனைவர். -”வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு” நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098. முதற்பதிப்பு – சூன் 2011.
6. புலியூர்கேசிகன் (உ.ஆ) -“ஓரம்போகியார் செய்தருளிய மருதம்” மூலமும் உரையும்” (எட்டுத்தொகை - ஐங்குறுநூறு- மருதம்) சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3,ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை – 600 014.